# தற்கால

## அரசியல் நிலை





144

003


திராவிட மாணவர் கழக வெளியீடு

பொன்மலை

# தற்கால

# அரசியல் நிலைமை

---

தளபதி C. N. அண்ணாத்துரை M. A., அவர்கள்

ஆற்றிய சொற்பொழிவு.

T020144

Sarasvathi Mahal Library, Thanjavur

பொன்மலை

திராவிட மாணவர் கழக வெளியீடு.

விலை அணா 6

## நான்முகம்.

சென்ற ஆண்டு (4—3—'46) பொன்மலை திராவிட வாலிபர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தளபதி **C. N. அண்ணாத்துரை M.A.,** அவர்கள் ஆற்றிய சொற்பொழிவை நூல் வடிவில் வெளியிட்டுள்ளோம். "**தற்கால அரசியல் நிலை**" என்ற தலைப்பின் கீழ் தளபதி அண்ணா பேசியதாலேயே இந் நூலுக்கு அதே தலைப்பு கொடுக்கப்பட்டிருக் கிறது. திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியம், மற்றும் பல கருத்துகள் இருப்பதால் இதனை அனைவரும் படித்து பயன்பெற வேண்டுமென்பதே எங்கள் நோக்கம். நூல் வடிவில் வெளியிடுவதற்குதவிய தளபதி அண்ணா அவர்களுக்கும் திராவிட வாலிபர் கழகத்தாருக்கும் எங்களது மனமார்ந்த நன்றி.

**திராவிட மாணவர் கழகம்,**
பொன்மலை.

பொருள் ஒன்றுதான், பேச்சிலும்—எழுத்திலும் ஆனால், "நடை" மாறுபடும். பேச்சு நடை வேறு; எழுத்து நடை வேறு. இதனை உணர்ந்தோ உணராமலோ, ஆர்வத்தால் தூண்டப்பெற்ற தோழர்கள், என்னுடைய பொது மேடைச் சொற்பொழிவுகளை நூல் வடிவில் கொண்டுவர விரும்புகிறார்கள். இது, ஒரு பொருள் பற்றிப் பேசப்பட்ட கருத்துக்களை எல்லோரும் அறியும் வாய்ப்பை உண்டாக்கும் என்ற போதிலும், அப்பொருள், நூல் வடிவில் எப்படி அமையவேண்டுமோ, அப்படி அமைக்கப்பட்டால்தான், அப்பொருளைப் பற்றிய கருத்துக்களை மக்கள் நன்குணர முடியும்.

(Sd) C. N. அண்ணாத்துரை

அன்புள்ள தோழர்களே !

நான் பொன்மலைக்கு வந்து பல நாட்களாகின்றன. நமது பெரியாரும் நானும் தற்கால அரசியலைப்பற்றி கூறியுள்ளோம். எனது நண்பர்கள் என்னை தற்கால அரசியல் நிலையைப்பற்றி பேச வேண்டும் என்று பணித்துள்ளார்கள்.

நானுவிதக் கட்சிகளும் தங்கள் கருத்துகளை நானுவிதமாகக் கூறி வருகின்றன. இன்று பல கட்சிகள் தேர்தலில் கலந்துப் போட்டியிட்டு ஓட்டு கேட்டு வருகின்றன. ஒவ்வொரு கட்சியும் அபேட்சகர்களை நிறுத்தி இருக்கின்றது. இங்குள்ள எல்லா கட்சிகளுக்குள்ளும் தேர்தலில் நிற்காத கட்சி "திராவிடர் கழகம்" தான். நாம் தேர்தலில் கலக்கவில்லை. அபேட்சகர்களை நிறுத்தவில்லை. தற்போது மற்ற கட்சிகளினுடைய அரசியல் நிலை தேர்தல் ஜுர வேகத்தில் இருக்கின்றது. நாம் தான் சாவதானமாக இருக்கின்றோம். தற்போது அரசியல் நிலையை சாவதானமாக நிர்ணயிக்க நம்மால் தான் முடியும்.

நீங்கள் பத்திரிகைகளைப் பார்த்திருந்தால் நாடு இப்போது ஒரே அமளியில் இருப்பதை அறியலாம். ஒருமாத காலமாக பம்பாய், கல்கத்தா, லாகூர், சென்னை, மதுரை, காஞ்சி முதலிய இடங்களில் கலகம் நடப்பதைக் காணலாம். இப்படிப்பட்ட கலகங்களில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம், தடியடிப் பிரயோகம் நடக்கின்றது. இதனால் சொத்து, சுதந்திரம் இவற்றை எல்லாம் இழக்கின்றனர் மக்கள். பல மக்கள் மடிகின்றனர். அரசியல் நிலையில் இத்தகைய அமளி தரையோடு நிற்கவில்லை. கப்பலிலும் பரவி இருக்கின்றது. கப்பல் சிப்பந்திகள், வெள்ளை அதிகாரிகளின் மோசமான நடத்தை தங்களது சுயமரியாதைக்கு கேடு விளைவிக்கக் கூடாத நிலைமையில் இல்லாமல் இருந்ததால் வேலை நிறுத்தம் செய்தனர். இப்படி அமளி செய்தால் இந்திய கடற்படையையே அழிப்போம் என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆணவமாகக் கூறியது. இவையன்றி வானத்திலும் புரட்சி ஏற்படக் காண்கின்றோம். அங்கும் விமான சிப்பந்திகள் தங்கள் குறைபாடுகள் நீக்கப்பட வேண்டுமென்று வேலை நிறுத்தம் செய்கின்றனர் அங்கு மட்டுமல்ல. தபால், தந்தி இலாக்காக்களிலும் வேலை நிறுத்தம் செய்யப் போவதாகக் கூறி வருகின்றனர். அதுமட்டுமல்ல. உங்களுக்கும் நமக்கும் தபால்கள் கொண்டுவர உதவும் இரெயில்வேயின் தொழிலாளர்களும்

வேலை நிறுத்தம் செய்கின்றனர். அகில இந்தியாவே வேலை நிறுத்தம் செய்யப்போவதாகத் தெரிவிக்கின்றது. நாமும், சீமான் கூட்டமும் சொகுசாகப் பயன்படுத்தக்கூடிய தங்கம் விளையக்கூடிய சுரங்கத்திலும், கோலார் சுரங்கத்தில்—தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றார்கள். எங்கும் தொழிலாளர் வர்க்கம், உண்ண உணவின்றி, உடையணியப் பணமின்றி, உருவம் குன்றி தனது கோரிக்கைகளுக்காகப் போராடுகின்றது. உலகத்தில் நடப்பதுபோல இங்கும் தொழிலாளர் வர்க்கம் போராடுகின்றது. இங்கும் அமளி நடக்கின்றது. ஆனால் இங்கு அமளியின் விளைவென்ன? பிணக்கோலம். பம்பாய் ஒரு லக்ஷம் பேர்களுக்கு மேலான ஜனத்தொகைக் கொண்டது. ஏற்பட்ட அமளியில் போலீசார் சுட்டனர். அதன் விளைவாக நான்கு பேர் இறந்தனர். இதுவரையில், காஞ்சி வரதராஜப் பெருமாள் கிளம்புவதற்குமுன் கேட்கும் வேட்டுச் சத்தத்தைத் தவிர வேறு சத்தம் கேட்காத காஞ்சியில் அன்று நான்கு பேர் பிணமானார்கள்.

நாகரீக சர்க்காரிலே நடு ரோட்டில் பிணம் காணப்படுமா? நாகரீக சர்க்காரால் நடு ரோட்டில் நடக்கும் அமளியைத் தடுக்கத் திறமையில்லை. திறமையில்லையேல், சர்க்கார் கௌரவமாகத் தனது அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு வெளியே செல்லட்டும். தங்களிடம் அதிகாரத்தையும் ஆயுதத்தையும் வைத்துக் கொண்டு ஆயுத பலமற்றவரை, நாடு இழந்தவரைச் சுட்டுத் தள்ளுவதா? அதிகாரம் தளர்ந்து நானிலம் இகழும் கடைசிக் கட்டத்திற்கு வந்தும், ஆங்கில ஏகாதிபத்தியம் மிரட்டுகின்றது. இன்னும் முரட்டு பிடிவாதத்துடன் இருக்கின்றது. பொது மக்கள் உள்ளத்தில் வாழ்விற்கும் வேறுபாடு தோன்றவில்லை. வெளியே சென்ற மகன் வீடு திரும்பவில்லை. காட்டிலே போனானா? இல்லை. நாட்டிலேதான் போனான். கொள்ளைக் காரன் வந்தானா? இல்லை. வெள்ளைக்காரன்தான் வந்தான். மகன் உலாவப் போனான். சண்டை வந்தது. வெள்ளைக்காரன் சுட்டான். மாண்டான் மகன். இதுவே இன்று நாட்டின் பொதுவான கருத்தாக உள்ளது. மக்கள் இன்று மற்றவனுக்கு அடங்கத் தயாராக இல்லை மேலேயும், கீழேயும் தங்கள் பலத்தைப் பயன்படுத்த இன்று அதிகாரத்திற்கு ஆள் இல்லை. துப்பாக்கித் துரை, நிபுணர்கள், பல்லக்கில் பவனி வரும் மத குருமார்கள், தர்ப்பாசூரர் இவர்கள் சுகமாக வாழ்கின்றார்கள்.

முதலாளிகளின் இரும்புப் பெட்டியில் எண்பது லக்ஷம் ரூபாய்கள் இருந்தாலும், ஏழைகள், பஞ்சம், பட்டினியால் வாடுகின்றனர். இப்பட்டினியின் கொடுமையே அகில உலக எதிரொலியாக இருக்கின்றது. இதுவே தற்போதைய அரசியல் நிலை, வெட்கமுறச் செய்யும் அரசியல் நிலை. இங்கே இப்படி இருக்கும்போது இங்கிலாந்தில் மூன்று மந்திரிமார்கள் நாங்கள் இந்தியாவிற்குப் போகின்றோம் என்று கூறுகிறார்கள். அப்போது அலெக்சாண்டருடைய மனைவியார் எதற்கு என்று அவரைக் கேட்பார். உடனே சொல்வாரவர், இந்தியாவிற்குச் சுய ஆட்சி கொடுக்கவும், அதைப்பற்றிய காரணங்களை விளக்கவும் செல்கின்றோம் என்பார். அதே நேரத்தில் இந்தியாவில் ஜின்னா மலபார் மாளிகையில் அமர்ந்து சொல்வார், "முஸ்லீம்களுக்கு பாகிஸ்தான் கொடுக்காத வரையில் இந்தியாவிற்கு சுய ஆட்சி கொடுத்துப் பயனில்லை. மறுத்தால் எதிர் காலத்தில் பத்து கோடி முஸ்லீம்களும் பெரியதொரு புரட்சி செய்வர்" என்று. டாக்டர் அம்பேத்கார், "நந்தன் காலம் முதல் சேரியிலே வாழ்ந்து வாடி, வண்டி இழுக்கும் தோழர்களாய், நாகரிக வாழ்க்கையில் வறியர்களாய், கால் வயிற்றுக்குப் பற்றாத கஞ்சிக்கும் அலையும் தாழ்த்தப்பட்ட மக்கள் வயிறார வறுமையில்லாமல் உண்டு, நோயார மருந்துடனும், அறிவாரக் கல்விச் சிறப்புடனும் எப்படி வாழ்வது" என்று சிந்தனை செய்வார். நம் பெரியார், "வீர திராவிடர்கள், மதம், சாதி முதலியவைகளினால் இழிபட்டு, ஒதுக்கப்பட்டு, எள்ளி நகையாடப்பட்டு, வதங்கி இருப்பவர் பண்போடு வாழ்வது எப்போது? நல்ல ஆண்மையுள்ளவர்களாக வாழ்வது எப்போது? நாட்டு வளம், நாட்டுப் பெருமை மக்களுக்குப் பயன்படுவது எப்போது?" என்று கேட்கிறார். எண்ணிப் பார்த்தால் அரசியல் நிலையில் அதிருப்திமயமாக இருக்கிறது. அதிருப்தியினால் ஏற்படுவதுதான் அமளி. இசையரங்கிலே பாடுகின்ற வித்வான் குரலிலே அபஸ்வரம் தொனித்தால் உடனே சபையில் அதிருப்தி. அதைத் தொடர்ந்து அமளி. பசி இருந்தால் கோபம் இருப்பதுபோல், அதிருப்தி ஏற்பட்டால் அமளி ஏற்படுகின்றது. ஆங்கில சர்க்கார் அரசாளத் திறமையற்றிருப்பதால், அரசாளும் முறையறியாமலிருப்பதால் அமளி ஏற்படுகிறது. உலவும் இடத்தில் அமளி. உள்ளத்திலே அமளி. வேலை செய்யும் இடத்தில் அமளி. நாட்டிலே அமளி. வீட்டிலே அமளி. பிரான்சில் புரட்சி ஏற்படுவதற்கு முன் இருந்த நிலையும் நம் நாட்டில் இன்று இருக்கின்றது. அரசியலிலே பெரிய கட்சி என்று நினைத்துக்

கொண்டிருக்கும் காங்கிரஸ், தான் மட்டும்தான் மக்களுக்கு சர்வ ரோக நிவாரணமும், மருந்தும் அளிக்க முடியுமென்றும், மற்ற கட்சிகளனைத்தும் லாயக்கற்றவைகளென்றும், துரோகிகள் என்றும் கூறுகின்றது. நாட்டின் உரிமை முதலியவற்றைக் கேட்க தனக்குத்தான் உரிமையும், சக்தியும் உண்டென்றும், தனக்குத்தான் பயிற்சி, பலம் இருக்கிறதென்றும், மற்ற இயக்கங்களுக்கு இல்லை என்றும் நினைக்கும் இயக்கம் அது. இந்த காரணத்தினால்தான் நாங்கள் தனிக்கட்சி நடத்துகின்றோமே ஒழிய தனிக்கட்சி நடத்துவதால் எங்களுக்கு லாபம் ஒன்றுமில்லை. இன்று நாங்கள் காந்தி குல்லா அணிய இரண்டு நிமிஷங்கள் பிடிக்காது. வந்தேமாதரம் பாட ஐந்து நிமிஷங்கள் ஆகாது. இருந்தாலும் தனிக்கட்சி நடத்துகின்றோம். காங்கிரஸ் கட்சி தனிக்கட்சி நடத்தும் கூட்டங்களைத் தூற்றுவதும், தேசத் துரோகிகள் என்று கூறுவதும், வெறுப்பதுவும் ஆகிய இச் செய்கைகளால் காங்கிரஸ்காரர்களால் தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்கிறார்கள். ஏன் இதைக் கூறவந்தேன்? இவ்வூரிலே சில நாட்களுக்கு முன் அசோக்மேத்தா என்பவர், ஜஸ்டிஸ் கட்சியைக் குழி தோண்டிப் புதைத்தாய்விட்டதென்று கூறினாராம். அசோக்மேத்தா என்றால் அர்த்தம் தெரியாது எனக்கு. ஆனால் அன்று ஆண்ட அசோகனைத் தெரியும். அந்த அசோகன் பெரியதொரு போரான கலிங்கப்போரை நடத்தி அதில் வெற்றி பெற்றான். ஆனால் அசோகன் வெற்றியைப் பிணக்குவியலின் முன்புதான் காணமுடியும் என்று கண்டு, பிறகு சண்டையே செய்யாத சத்யசீலனானான். இதை அசோக் மேத்தா காணட்டும். வெற்றி கண்டாலும் பிணக் குவியல்களுக்குப் பிறகுதான் காணமுடியும் என்பதை உணரட்டும். ஜஸ்டிஸ் கட்சி, முஸ்லீம் லீக், கம்யூனிஸ்டு கட்சி ஆகிய இவற்றிற்குக் குழி தோண்டும் காரியத்திலேயே இருந்தால் அசோக் மேத்தாவிற்கு வேறு வேலை செய்ய நேரம் இருக்காது! குழி தோண்டும் காரியம் சிரமமானதும், ஆபத்தைத் தருவதும் கூட. அதைப்பற்றிய கதை எங்களுக்குத் தெரியும். இனியாவது அந்த காரியத்தை நிறுத்திவிட்டு அபிப்பிராய பேதங்களை நீக்குவதற்காகத் தோண்டிய குழியின்மீது ஒரு பலகையைப் போட்டு மூடி மெல்ல நடந்து சென்று பரிசீலனை செய். தோழனே! பெரியதொரு குழியைத் தோண்டும் காரியத்திலேயே இருந்தால் அது உனக்காகவே முடியும். இந்தியாவில் தருமராஜன், துரியோதனன் காலம் முதல் அசோக்மேத்தா காலம் வரை குழி தோண்டும் வேலைதான் நடந்து வருகின்றது. சரி, நம்மைப்

பற்றி அசோக்மேத்தா குறை கூறட்டும் பாரத யுத்தம், குரு க்ஷேத்திரத்தில் அண்ணன் தம்பி சண்டையாக நடந்து வந்தது. பின் ஹிந்து, முஸ்லீம் சண்டை, பானிபட் சண்டை ஏற்பட்டது. இந்த இரண்டின் கூட்டு விளைவுதான் கிளைவ் வெற்றி கண்ட பிளாசிச் சண்டை. இந்த புண்ய பூமியான, வேள்வியில் சிறந்த நாட்டை, வேப்ப மரத்தடியில் வீரபத்திரகாளி, மாரியம்மன் உள்ள நாட்டை, ஆழ்வாராதிகள் அவதரித்த இந்த நாட்டை, பரமசிவன் தனது பத்தினியைப் பாலகனுக்குப் பாலூட்டி வரு மாறு அனுப்பிய இந்த நாட்டை, இங்கிலாந்தில் உதவாக்கரை என்று ஒதுக்கப்பட்ட கிளைவ், லண்டன் சாக்கடைகளில் புரண்ட கிளைவ், பிளாசியில் பிடித்தான். குரு க்ஷேத்திரத்தை அடக்கி இருந்தால் பானிபட் நடை பெற்றிருக்காது. பானிபட் இல்லை யேல் பிளாசி இருந்திருக்காது

இன்றுவரை, இம்மாதிரி காங்கிரஸ் கருவறுக்கும் வேலை யில் ஈடுபட்டு வந்தால், கருவறுப்பதே அவர்கள் வேலையெனில் திராவிடர்கள் சண்டைக்குப் பயந்தவர்களல்ல. வந்த சண் டையை விட்டவர்களுமல்ல. உதாரணம் கொடுக்கின்றேன். வட நாட்டரசர்களான கனக விசயர்கள் தமிழ் மன்னர்களை இகழ்ந்து கூறினாராம். அந்த ஆரிய மன்னர்கள், கங்கைக் கரை யில் உலாவிய கயவர்கள், சோமரசமுண்டு சொகுசு மயக்கத்தில் இருக்கும் சோம்பேறிகள். தமிழ் மன்னர்கள் இவ்வாறு இழித் துரைக்கப்பட்டார்கள் என்பதை யாரோ சொல்ல கேள்விப் பட்டு தென்னாட்டில் ஆண்ட சேரன் செங்குட்டுவனிடம் சொன் னார்கள். தமிழ் மன்னர்கள் இழித்துரைக்கப்பட்டனர் எனக் கேட்டவுடனே செங்குட்டுவன் உரையிலிருந்து வாள் வெளி வந்தது. உடனே தொடர்ந்து வீரர்கள் உரைகளில் பதுங்கி யிருந்த வாள்கள் வெளி வந்தனவாம். படையெடுத்து சென் றார்கள் வடநாட்டிற்கு. நல்லதோர் படை தொடர கங்கைக் கரை சென்றான்—சேரன் செங்குட்டுவன். கண்டான் எதிரிகளை. போரில் வெற்றி கண்டான் தன்னைத் தட்டிப் பேசிய தடியர் களை மண்டியிடச் செய்து இமயத்தில் கல்லெடுத்து கங்கையில் நீராட்டி அம்மன்னர்களின் தலையில் அக்கல்லை வைத்து தென் னாடுவரை சுமந்துவரச் செய்தான். இதற்கு சரித்திரமில்லையா? ஏடு நமக்கு எடுத்துச் சொல்கிறது. இதைத்தான் நான் காங் கிரஸ் தோழர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தேசீயத் தோழனே! வீணுகச் சண்டைக்கு விதை தூவாதே, வம்பை விலைக்கு வாங்காதே. சண்டையை விலைக்கு வாங்காதே

கப்பற்படை வீரர்கள் வெள்ளையன் மார்பிற்கே அவனது பீரங்கியைத் திருப்பும் காலம் இது. இதை நீ கேட்பதா? அல்லது நான்தான் ஏன் என்று கேட்பதா? அஹிம்ஸா மூர்த்திகளே! உங்களுக்கு உதவாது சண்டை. வெள்ளையனை விரட்டுவதில் ஈடுபட்டிருக்கும் நீங்கள் துர்ப்பாக்கியர்களான எங்களை, பணபலம், பத்திரிகைப் பலம் அற்ற எங்களை, குழியில் தள்ளும் வேலையில் ஈடுபட வேண்டாம். எங்களைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு வேலை அதிகம். உங்கள் காரியத்தில் நாங்களும் குறுக்கிட விரும்பவில்லை. ஏன்? வெள்ளைக்கார சர்க்காருக்கு புத்தி வரட்டும் என்று எண்ணிதான். ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்ட நேரத்திலேயே வெள்ளையன் சந்தோஷப்பட்டிருப்பான். 'ஜஸ்டிஸ்' என்ற வார்த்தையிலேயே ஒரு இனிப்பு இருந்தது. அது அவர்களுக்கு விருந்தாக விளங்கியது. வெள்ளைக்காரன் ஜஸ்டிஸ் கட்சியைக்கொண்டு காங்கிரஸை நசுக்கலாம் என்றெண்ணினான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இராஜ தந்திரத்தில் மிகவும் பேர்போனது. காங்கிரஸை இதன் உதவி கொண்டு நசுக்கலாம் என்றெண்ணி ஆரம்பத்தில் வெற்றி பெற்றனர். ஏனெனில் சீமான்களும், மிராஸ்தார்களும், மிட்டாதார்களும் ஜஸ்டிஸ் கட்சியில் தஞ்சம் புகுந்திருந்தனர். இவர்கள் தங்கள் சுயநல முன்னேற்றத்திற்காக கட்சியில் கலந்துகொண்டார்கள். ஆங்கிலேய அரசாங்கத்தார் வெளி உலகில் ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றியும் அதன் தலைவர்களான பானகல் அரசர், நாயர் இவர்களைப்பற்றியும் பிரசாரம் செய்தனர். காங்கிரஸுக்கு எதிரி ஜஸ்டிஸ் கட்சி என்றும், வெள்ளைக்கார ஆட்சி நிலைக்கவேண்டுமென்று அது விரும்புகிறதென்றும் வெளிநாடுகளில் பேச ஆரம்பித்தனர்.

இப்போது வாலிபர்களாகிய நாங்கள் உணர்ச்சி மிகுதியால் உள்ளம் ததும்ப வாலிபப் பண்புடன் விளங்கும் வயோதிகர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் புரட்சிப் புயலில் பங்கெடுத்துக்கொண்டுள்ளோம். பெரியார் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியிலே மறுமலர்ச்சியைக் காண விரும்பினார். புரட்சிப் புயல் ஜஸ்டிஸ் கட்சியிலே நன்றாக ஊடுருவிப்பாய்ந்து சேலத்தில் அது சற்றுப் பலமாக வீசியது. மிட்டாதார்களும், மிராஸ்தார்களும் ஜஸ்டிஸ் கட்சியிலே தங்களுக்கு இடமில்லை எனக்கண்டார்கள். அவர்களின் பாடு ஆட்டத்தில் முடிந்தது. எங்களது விரிந்த திட்டங்களைக் காண அவர்கள் விருப்பமில்லாதவராயினர். பார்த்தோம்

எங்கள் முன்னேற்றப் பாதைக்கு அவர்கள்தான் முட்டுக்கட்டை என தெரிந்துகொண்டோம். எனவே புரட்சிப் புயலின்வேலி ஓரத்திலே நிற்காதே "சற்றே விலகி இரும் பிள்ளாய், சன்னி தானம் மறைக்குது" என்ற பாட்டை அன்றே அந்த அன்பர் களுக்குச் சேலத்தில் பாடிக் காட்டினோம். சேலம் கண்ட புரட்சி நாளிலே ஜஸ்டிஸ் கட்சி மறுமலர்ச்சி அடைந்தது.

அதேபோல் நீயும் விலகிவிடு என்றுதான் தேசீயத் தோழ னுக்கும் கூறுகின்றேன். இப்படி மறுமலர்ச்சியடைந்த இன எழுச்சியை அடக்க எந்த அசோக்மேத்தாவிற்கும் உரிமையில்லை. எந்த மகாத்மாவிற்கும் உரிமையில்லை. எந்த சுதந்திர இயக்கத் திற்கும் உரிமை இல்லை. எங்கள் இயக்கம் விடுதலை இயக்கம். இருண்ட கண்களும், வறண்ட உடலும் படைத்த ஏழைகளின் ஸ்தாபனம். இங்கே பணக்காரன், ஏழை என்ற பேதமே கிடையாது. பணக்காரன் ஏழையை அடக்கியாளல் என்ற ஆட்சி கிடையாது. "விதி"யைத் தாக்கினால் முதலாளி முறை முறியும் என்று கண்ட மகத்தான ஸ்தாபனம் எங்கள் ஸ்தாபனம். நாங்கள் தேர்தல் கீதம் பாடவில்லை. ஏகாதிபத்தியம் ஏன் உள்ளது என்பதன் காரணத்தை உணர்ந்ததும், எந்த மூலையில் என்னென்னவிதமான ஆயுத பலத்தால் சுரண்டப்படுகின்றது என்பதைக்கண்டு எதிர்த்து ஒழிப்பதுமான இணையற்ற ஸ்தாபனம் எங்களுடையது. அசோக்மேத்தா குழிதோண்டும் நேரத்தில் 4 அடியாக இருக்கும் எங்களுக்கு 5 அடி குழி தோண்டுவார். அவர் குழிதோண்டி முடியும் நேரத்தில் நாங்கள் 6 அடியாக வளர்ந்திருப்போம். உடனே அவர் இன்னும் 2 அடி அதிகம் தோண்டுவார். அதற்குள் நாங்கள் 4 அடி அதிகம் வளர்ந்துவிடுவோம். கடைசியில் குழி தோண்டி அலுத்து சலித்த அசோக்மேத்தா வெட்டிய குழியில் தானே விழுந்துவிடுவார். இதற்குள் ஓங்கி வளர்ந்த திராவிடம் அவருக் குக் கைகொடுத்துத் தூக்கிவிட்டு அசோக்மேத்தாவே! வட நாட்டிற்குப் போ என்று சொல்லும். வேண்டுமானால் செய்து பார்க்கட்டும்.

அசோக்மேத்தாவின் வார்த்தைகள் வலிவற்றவை நாங்கள் நினைக்கவில்லை அசோக்மேத்தா சத்தியமூர்த்தியைவிடச் சிறந்த வர் என்று. பண்டிதநேரு தீப்பொறியைக் கக்குகின்றார். ஆனால் அவர் ஒரு மின்மினி. சுபாஸ்சந்திரபோஸ் ஒரு ஜுவாலை. அவர் தோற்றது உண்மை. ஆனால் கட்சியின் ஜீவசக்தி வளரும்.

யாருக்கு எது அவசியமானதோ அதை அவர்கள் கைவிடமாட்டார்கள். எனவே அசோக்மேத்தாக்கள் அறியட்டும். எங்களை அடக்க முயலாதீர்கள். எங்கள் இயக்கத்தில் ஜீவசக்தி உள்ள வரை அது வளரும். எங்கள் இயக்கம் வளர்ந்தது. எதிர்ப்பில்லாமலா? எங்கள் சோலை எப்படித் தழைத்துத் தளிர்வுடன் தோன்றுகிறது? நாங்கள் விதை நட்டோம், சோலையாயிற்று. இதற்கு மாதம் மும்மாரி பெய்யவில்லை. சோலையைச் சுற்றி தகுந்த காவலில்லை, சுற்றி பலமான வேலியுமில்லை. பணப் பெருக்கமில்லை. பத்திரிக்கைப் பலமில்லை எனினும் வளர்ந்தது. அண்ணனுக்கு நம் கொள்கை பிடித்து இயக்கத்தை ஆதரித்தாலோ அது தம்பிக்குப் பிடிக்காது. மகனுக்குப் பற்றிருந்தால் தந்தை வெறுக்கிறார். கணவனுக்குப் பற்றிருந்தால் மனைவி காய்கிறாள். இப்படி மக்களுடைய எதிர்ப்பினிடையேயும் இயக்கம் வளர்ந்தது ஜீவ சக்தியினாலேயே.

ரேடியோவில் ஒருவர் இசை பாடக் கேட்கிறோம். ஆள் தெரியவில்லை. இருந்தாலும் அவரின் குரலினிமையால் இழுக்கப் பட்டு ஆள் முன் இருப்பதைப்போலவே எண்ணி ரேடியோவிலிருந்து பாட்டைக் கேட்கிறோம். ஒலியின் இனிமை ஆளை இழுக்கின்றது. அதேபோல் இன்று எங்கள் கூட்டங்களில் கற்களை வீசியவர்களைக் காவலர்களாகவும், அலட்சியமாகப் பேசியவர்களை ஆதரவாளர்களாகவும் ஆக்கி எதிர்ப்போரை உள்ளுக்கழைத்தது ஜீவசக்தியே.

இன்று அகில உலகத்திலும் கம்யூனிஸ்டு கட்சி இருக்கின்றது. சைனாவின் மகாத்மாவான சியாங்--கே-ஷேக் விழலுக்கு இறைத்த நீர் போன்று கம்யூனிஸத்தையும், கம்யூனிஸ்டுகளையும் எதிர்த்துத் தோல்வியுற்றார். இரஷ்யாவின் பொதுவுடைமைத் தத்துவத்தை எதிர்த்துப் பயனில்லை என்று அறிந்து சர்ச்சில் துரை கூட "வரவேற்கவேண்டியதே" என்று கூறினார். காரல் மார்க்ஸ் புத்தகத்தைப் படிக்கவேண்டிய இந்த நேரத்தில் இங்கே மனுகாட்டிய வழியில் மகாத்மா போகிறார். இங்கு மாஸ்கோ மணம் பரவாது சனாதன மணம் பரவுகின்றது. காந்தியார் வாழும் நாடு இது.

இத்தாலியை மீட்டது அருமையான ஆரஞ்சுப் பழம் சாப்பிட்டுக்கொண்டிருந்தவர் அல்ல. கரிபால்டி! இத்தாலியை மீட்டான். அவனுக்கு வீரர்களைத் தட்டி எழுப்பத்தெரியும்.

கோழைகளை வீரர்களாக்கத் தெரியும். ஏழைகளிடமுள்ள கோழைத்தனத்தை நீக்கத் தெரியும். இரத்தம் பெருகுவதைக் கண்டு கண்ணீர் விடாமலிருக்கத் தெரியும். கண்ணீர் கண்டு வாடும் கோழையல்ல அவன். நாட்டை விடுவிக்க ஏறினன் குதிரைமீது. மனைவியும் தொடர்ந்தாள். கருவுற்ற மனைவி உடல் நோகுதென்ருள். மர நிழலில் மனைவி குழவி ஈன்ருள். மனைவியின் முகத்தில் சோகக்களை வீசியது. பார்த்தான் கரிபால்டி. தன்நண்பனைக் கூப்பிட்டு, மரண படுக்கையில் குற்றுயிராய்க்கிடந்த மனைவிக்கு உதவியாக இருக்கும்படி கூறிவிட்டு, உடனே குதிரை மீதேறிப் புறப்பட்டு விட்டான். சென்ருன் விரைவாக, இத்தாலி விடுவிக்கப்பட்டது. இத்தாலியும் உருப்பட்டது. அதே போல்தான் லெனின், ஸார் (Czar) ஆட்சியிலிருந்து விடுவித்தான் ரஷ்யாவை.

இங்குமரத்திலே மாகாளியைக் காண்கிருர்கள். அந்த, அந்தராத்மாவின் மினு மினுப்பான மேனி காண ஒரு விறுவிறுப்பை ஊட்டுகின்றது என்கிருர்கள்! இரஷ்யாவில் புரட்சி ஏற்பட்டு ஸாரின் தலை கொய்யப்பட்டது. கூலிக்கு கொக்கரித்த நாட்டில் புரட்சி ஏற்பட்டது. அந்த நாட்டு லெனின் தீரன், வீரன். பஜனைமடம் கட்டியவனல்ல, இங்கோ அரசியலுக்கு ஆஸ்ரமம். இங்குதான் துர்ப்பாக்கிய அரசியலில் பஜனை இருக்கிறது. துர்ப்பாக்கியம் மிகுந்த இந்த நாட்டிலே, ஆப்பிரிக்காவிற்குச் சென்று அங்கு நம்மவர்படும் துயர் கண்டு மனம் வெதும்பிப் பல போராட்டங்களை நடத்திப் பின் பம்பாய் வந்திறங்கி, இந்நாட்டிலுஞ் சர்க்காரை எதிர்த்து சிறையில் பல தடவை புகுந்து சளையாது உழைத்த ஒருமாபெரும் தலைவரை, இந்த நாட்டு பகவத் சிங்கை தூக்கு மேடைக்கு அனுப்பிவைத்து, சில திருப்பூர் குமரன்களை பலியாக்கி, பல அருணு அசப் அலிகளைத் தலை மறைவாக இருக்கச் செய்து, சுபாஸையும் மறையும்படிச் செய்து பல பல தொல்லைகளுக்கு ஆளாகிய பின்பு ஒரு மோஹன்தாஸ் கரம்சந்தை மகாத்மாவாக்கினர்கள். மக்கள் பக்தகோடிகளின் பட்டியிலே ராமதாஸ், ரமணரிஷி, கபீர்தாஸ் ஆகியவர்களின் பட்டியிலே மகாத்மாவின் பெயரையும் பொறித்தனர். கிளர்ச்சி வீரரை அதிலே சேர்த்து விட்டார்கள். இது எவ்வளவு பெரிய மகத்தான தேசிய நஷ்டம். இதைத்தான் தேசியத் தோழர்கள் மறந்து விடுகிருர்கள். நாட்டில் பணக்காரரும், பாமரரும் போற்றும் ஒரு தலைவரை சிருஷ்டிப்பது கடினம். என்னைக் கேட்டால் மானிலத்தில் காந்தியாருக்கு இருக்கும் செல்வாக்கு வேறு

யாருக்கும் கிடையாது என்று தான் சொல்வேன். அவரால் ஆரம்பிக்கப்பட்டு ஊக்கி உயிராக்கப்பட்ட சுதந்திர இயக்கத்தை நசுக்கிவிட ஏகாதிபத்தியம் எடுத்துக்கொள்ளும் எல்லா எதிர்ப்பு களையும் பார்த்தால் சுதந்திர இயக்கம் கண்டதொரு காந்தியாரை போன்றதொரு தலைவரை உண்டாக்குவது கடினம் என்பது விளங்கும். திராவிடர் கழகத்தார் அவரின் ஒரு சில கொள்கை கள், திட்டங்கள் இவற்றை எதிர்க்கின்றார்கள். முஸ்லீம் லீக் தலைவர் ஜனப் ஜின்னா காந்தியாரின் "மகாத்மீய்" சக்தியைப் பற்றியோ, அவரின் தலைமைப் பதவியைப்பற்றியோ அவரை எதிர்க்கவில்லை. ஆனால் "ஒரே இந்தியா" எனும் அவரது ஒரே கொள்கையைத்தான் எதிர்க்கிறார். இப்படி எதிர்ப்போர் ஒரு சிலரே. ஆதரிப்போர் அநேகர்.

சீமான்கள் சிற்றசர்கள் முதல் தோட்டிகள் வரையிலும் ஆதரிக்கின்றனர். மாளிகை முதல் மண்குடிசை வரையிலும் மகாத்மாவின் படம். முதலாளி முதல் ஏழைத் தொழிலாளி வரையிலும் கதர் தொப்பி. இவ்வளவு சீரும் சிறப்பும் இருக் கிறது. காந்தியார் பாமரரை விடுவிக்க வந்த மகான் என எண்ணு கின்றனர். சீமான்கள் சிரத்தைத் தாழ்த்திக் கரத்தை ஏந்தி தெய்வமென்றும், தர்மதேவதை என்றும் தொழுவார்கள். புலவர்கள் அவரைப்பற்றிக் கவி பாடுவர், நாடகக்காரர்கள் அவரைப்பற்றி நாடகம் ஆடிக்காட்டுவார்கள். படக்காரர்கள் காந்தி படத்தைக் காட்டுவர் கவிவாணர்கள் கவிதை தீட்டுவர். சர்க்கார் கூட படம் பிடித்துக் காட்டுவார்கள். அவருடைய அரையாடை அழகைப்பற்றி அண்டம் புகழும். புன்னகவராளி யில் அரையாடை அழகைப்பற்றிக் கோகிலகானங்கள் இசை பாடுவார்கள். சிரித்த முக விலாசம் படம் பிடித்துக் காட்டப் பட்டது. இவ்வளவு இருந்தும் லெனின் பெற்ற வெற்றியில் ஏன் ஆயிரத்திலொரு பங்கு காந்தியாரால் காண முடியவில்லை ஸார் ஆட்சியைவிடக் கொடியதா இங்குள்ள ஆட்சி. திருச்சியில் ஸாரினா Czarina என்னும் படம் நடந்தது அதில் காதரின் Catharine என்ற பெண் நாட்டை ஆள்கிறாள். அவள் ஆட்சியில் மக்கள் குமுறி புரட்சி செய்கிறார்கள். சிப்பாய்கள் கலகம் செய்கின்றனர். காவல்காரன் புரட்சி நடக்கிறதென்று உலாவிக்கொண்டிருக்கும் அரசிக்கு உணர்த்துகிறான். இதைக் கேட்ட பட்டமகிஷி படுக்கையறையில் காவலாளனுடன் இரச லீலைகளில் ஈடுபடுகிறாள். வாலிபவிருந்து நடத்துகிறாள். அப்படிப்பட்ட நிலையில் இல்லை-பிரிட்டிஷ் ஆட்சி. காந்தியார்

எதில் வெற்றி பெற்ருர் என்று கேட்கிறேன்? அவருடைய எந்த தத்துவத்தை மக்கள் கடைபிடித்தார்கள். எங்கும் ஒற்றுமையே நிலவுகின்றதென்ருல் ஏன் பாகிஸ்தான்; பிராமணர் பிராமணரல்லாதார் பிரச்சினைகள்? அஹிம்சையை மக்கள் கடைபிடிக்கிருர் என்ருல், இந்நாட்டில் அஹிம்சை உண்டென்ருல் ஏன் அலகபாத், லாகூர், பம்பாய், சென்னை முதலிய இடங்களில் அமளி நடக்கிறது. தீண்டாமையை ஒழிக்க பாடுபட்டார், கதர் இயக்கத்தை வளர்க்கப்பாடுபட்டார், கள்குடியை ஒழிக்கப் பாடுபட்டார், ஏன் வெற்றி பெறவில்லை? உண்மையிலேயே காந்தியைவிடப் பெரியதொரு மகாத்மா இங்கு இல்லவே இல்லை. ஒன்றைச் செய்ய முடியவில்லையே? வேறு பாதையில் செல்லட்டுமே! நான்கு பவுண்டு சம்மட்டியால் ஒரு பொருளை உடைக்க முடியவில்லை. தன்னிடம் இருக்கும் மற்ரெரு சம்மட்டி இரண்டு பவுண்டுதான். நாலு பவுண்டால் உடைக்க முடியாத பொருளை இரண்டு பவுண்டால் உடைக்க முடியாது என்று ஓய்ந்துபோன கையுடன் உட்கார்ந்திருக்கும் உழைப்பாளி உணருவானே!

உண்மையிலேயே மகாத்மா இந்த லோக மகாத்மாவல்ல. வேறு லோக மகாத்மதான், அஹிம்சையே அவரது அந்த லோக மூச்சு. சாந்தமே அதன் செய்கை. அதைத்தான் சென்னைக்கு வந்த மகாத்மா நிரூபித்தார். சர்ச்சில் துரை அமெரிக்காவிற்குச் சென்ருர். ட்ரூமன் துரை இங்கிலாந்திற்குச் சென்ருர் என்று பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். அங்குள்ள மக்கள் பார்த்தார்கள். கைகொட்டி ஆரவாரம் செய்தார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வெளி வந்ததைப் பார்த்தோம்.

இங்கோ சென்னைக்கு மகாத்மா வந்தார். அவரை யாவரும் சென்று தரிசித்தார்கள். மகாத்மா தரிசனம் தந்தார். ஏக்,தோ என்ருர் கை கூப்பினர். பின் என்ருல் "ராம துனியா". பாட்டு எல்லோரும் ராமதுனியா பாடித் தொழவேண்டும், துதிக்க வேண்டும். இந்த செய்கைதான் நாட்டு விடுதலைக்கா? விடுதலைப் போராட்டமா இது? இவ்வளவு பக்தியோடு மக்களுக்கு பஜனை செய்யக் கற்றுக் கொடுக்க ஆப்ரிக்கா சென்று அவதிப்பட்டு அலகாபாத் வந்து அமைதி காணுது, இம்சைகள் பல அனுபவித்து சிறை புகுந்து கஷடப்படவேண்டியதில்லையே. இந்த காரியத்தை வேப்ப மரத்தடியில் இருக்கும் வேலன் செய்வானே. திருவண்ணுமலையில் எவருமறியாது ஏகாந்தமாய் வாழ்ந்த ரமண

ரிஷி செய்த காரியமல்லவா இது! புதுச்சேரியில் புகழுடன் விளங்கும் அரவிந்த கோஷ்டி இல்லையா இதைச் செய்ய! இப்படிப்பட்ட அனுவசியமான செயலை உலகம் போற்றும் உத்தமராகிய நீரா செய்ய வேண்டும்? இது அறிவுக் காலமாயிற்றே? சிந்தித்துப் பார்க்கவேண்டும். தேசியத் தோழர்களே! இதற்கு இவ்வளவு பணம் பாழாவதா? வீரம் வீணாவதா? காலம் வீணாவதா? இதற்கு இவ்வளவு வாலிபம் வேண்டுமா? இன்றைய அரசியல் காங்கிரஸ், காந்தியை மகாத்மா வாக்குவதிலேயே முனைந்துள்ளது என்று கூறுவேன்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு மனப்பான்மை இன்று காந்தீயக் கொள்கையில் கொஞ்சமேனும் இல்லை. ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இன்று நாட்டிலே கிளம்புகின்ற எதிர்ப்புச் சக்திகள் வெவ்வேறு வகைப்பட்டன. காந்தியாரும் காங்கிரசும் உண்டாக்கியுள்ள எதிர்ப்புச் சக்திக்கும் முஸ்லீம் லீக், கம்யூனிஸ்டு கட்சி, திராவிடர் கழகம் இவை ஏற்படுத்தியுள்ள ஏகாதிபத்ய எதிர்ப்புச் சக்திக்கும் மகத்தான வேற்றுமை உண்டு. காந்தியாரின் எதிர்ப்புச் சக்தி "Quit India" இந்தியாவை விட்டு வெளியேறு என்பதுடன் நின்றுவிடுகிறது. ஜனாப் ஜின்னாவின் எதிர்ப்புச் சக்தியின் அர்த்தம் இந்த நாட்டை விட்டுக் காங்கிரஸ் கூறுகிறபடி வெள்ளையன் வெளியேறி விட்டால் பிறகு காலியாக உள்ள பீடங்களில் யார், யார் எப்படி, எப்படி அமர்ந்து ஆள்வது என்பதே.

டாக்டர் அம்பேத்காரின் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியின் உட்பொருள் "ஜாதி இந்துக்களின் கொடுமையான பிடியினின்றும ஆதி திராவிடர்களுக்கு விடுதலை அளித்து அவர்களை மனிதர்களாக ஆக்குவது" என்பதே. இதைப்போன்ற ஆத்மார்த்தத் துறையில் ஆரிய ஏகாதிபத்தியத்தின் கீழ் வாழும் திராவிட மக்களை விடுவித்து அவர்கள் யாரும் தாழாமல், எவரையும் தாழ்த்தி தாங்கள் மேலாகாமலும், "எல்லோரும் ஓர் குலம்" என்ற அடிப்படையின் மீது வாழ வேண்டும் என்று எழுப்பப்பட்டதே திராவிடர் கழகத்தாரின் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தி. இவைகளில் எது இக்காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றது, எது மேலானது, எது தேவையானது என்று நிர்ணயித்துக் கூறுவது உங்கள் கடமை.

நீங்கள் இந்நாட்டு மக்கள் விடுதலை வேண்டும். இந்நாட்டு மக்களாகிய நீங்கள் காந்தியார் கூறும் சுயராஜ்யத்தைப் பற்றிச்

சிந்தித்துப் பாருங்கள். காந்தியார் கூறுவது என்ன? சுயராஜ்யத்தில் சீமான்களும், சிற்றரசர்களும் சுகமாக இருப்பார்களாம். செல்வமும் கூட இருக்குமாம், ஏழைகளுக்குக் காவலர்களாகவும் பராமரிப்பவர்களாகவும் இருப்பார்களாம். மற்றபடி இப்போது உள்ள நிலை ஒன்றும் வெள்ளையன் வெளியேறிய பின் மாறாது என்று காந்தியார் கூறிவிட்டார். எனவே இதிலிருந்து என்ன தெரிகின்றது. சீமான்கள், சிற்றரசர்களின், வாழ்க்கை செல்லரித்துப் போகாது. பிர்லாக்களும் பஜாஜ்களும் இருப்பார்கள். திருவாங்கூர், மைசூர் சமஸ்தானாதிபதிகளுக்கும் கெய்க்வார்களுக்கும் இடமுண்டு. இது தானே அதன் பொருள். இது சரியான சுயராஜ்யமா? ஆங்கிலேயன் இருந்த இடத்தில் இவர்கள் இருப்பார்கள் என்றால் அதனால் பயன் என்ன? அடிக்கடி கூறுவார்கள் நாம் அடிமைப்பட்டிருப்பதுபோல் சமஸ்தானாதிபதிகளும் வெள்ளையனுக்கு அடிமை என்று. ஆனால் ராஜா அடிமை என்றால் அது முற்றும் வேறுபட்டது. அவர் ஏகாந்தமாக மனோகரமான தம் மாளிகையில் வீற்றிருப்பார் மேஜைமீது மனதிற்கு உவகை தரும் மதுக்கிண்ணம் உண்டு. இன்பத்தைப் பெருக்க மதுரகீதம் இருக்கும். நேத்திரானந்த நடனம் வேறு. அவரது வாழ்வில் வறட்சி இல்லை. மெருகு கலையாத மோட்டாருடனும், காலடி பணியும் பணியாளருடனும், கட்டளையை எதிர்பார்த்திருக்கும் காவலருடனும் பவனி வருவார். திருவாங்கூர் மகாராஜா ஏட்டில் அடிமை. வீட்டில் என்ன அடிமை? அவருக்கு ஆசீர்வாதம் செய்ய பக்கத்திலே பத்மநாபசாமி இருக்கிறார். அவரது மேனியின் பளபளப்பை மாற்ற முடியுமா? அவரது மாளிகையிலே மலர்த்தோட்டம் இல்லையா? அதிலிருந்து இன்ப மணம் பெருகி வாராதா? பிரதானிகள் புடை சூழ மதி முகம் படைத்த மங்கையரோடு அவர் வீதியில் வனிதா இரத்தினங்களோடு பவனி வராமலிருக்கிறார்களா? என்ன குறைவு? இதுவும் அடிமை வாழ்வா? எல்லோரும் அடிமைகள் என்பது மேல்வாரியான உண்மை. நம் கையில் பூட்டப்பட்டிருப்பது இரும்பு விலங்கு, அவர்கள் கையில் விளங்குவது தகதகவென்றிருக்கும் தங்க விலங்கு. நம் கையிலுள்ள விலங்குகளைக் கழற்ற முடியாது. அவர்கள் கழற்றிக் கொள்ள முடியும். அதுவும் மோகனப் புன்னகையுடன் விளங்கும் மெல்லியர்களைக்கொண்டு! நாம் அடிமைகள். அவர்கள் அரசர்கள். நாம் ஏகாதிபத்தியக் கடைசி பல்லில் அகப்பட்டு நசுக்கப்படுகிறோம். அவர்கள் சக்கரங்களுக்குமேல் உட்கார்ந்திருக்கும் கொலுப் பொம்மைகள். இதை எப்படி அப்படியே சுயராஜ்யத்திலும் காண நம் மனம் சகிக்கும். கொலுப்

பொம்மைகளின் ஜோணல் சேட்டைக்குக் குமாரர்களைப் பலி கொடுக்கவா வாலிப உலகம் உள்ளது? வித்தியாசம் உள்ளது. காற்று அடிக்கிறது. சருகு நன்றாக பறக்கிறது. ஒரு கொடியும் ஆடுகின்றது. அதனோடு சேர்ந்து மலரும் ஆடுகின்றது அதே காற்றில் ஆள் ஆடுவதில்லை. ஆனால் அவன் கட்டியிருக்கும் ஆடைமாத்திரம் ஆடுகின்றது. காற்று அடித்தல் என்றும் செய்கை ஒன்றுதான். ஆனால் அதன் விளைவுகள் பலப்பல. அதுபோல் சுதந்திரம் என்பது யாவரும் வேண்டுவதே. ஆனால் நாட்டு மக்களில் யார் யாருக்கு அது எவ்வெவ்விதமாக அளிக்கப் பட வேண்டுமென்று சிந்திக்கவேண்டுமென்பதே எனது ஆவல். இதைப்பற்றிச் சிந்திப்பதற்காகத்தான் நாங்கள் தேசீயத் தோழர் களை அழைக்கின்றோம். விரோதிகள் என்ற முறையில் அல்ல. நண்பர்கள் என்ற முறையில். நாட்டை மீட்டவர்கள் நாட்டை மீட்ட பிறகு சர்க்கஸில் கூண்டில் உள்ள புலியை அடக்குவது போன்று எங்களை அடக்கினால் அது சுயராஜ்யமா? யாருக்காக வருகிறது. கங்கைக்கரையில் உள்ள ஆரியனுக்கும் காவிரிக் கரையில் உள்ள ஆரியனுக்கும். காவிரிக்கரையில் உள்ள ஐயங் காருக்கும் சலுகை காட்டுவதுதான் சுயராஜ்யமென்றால் அது எப்படி இருக்கும்? மனோ ராஜ்யமா? அல்லது மனு ராஜ்யமா? குல ராஜ்யமா அல்லது இன ராஜ்யமா? அரசியலில் இதை எடுத்துச் சொன்னால் துரோகிகளா? பத்திரிகைப் பலமுள்ள வர்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம் போலும்!

திடீர் திடீரென்று கம்யூனிஸ்டுகள் தேசத் துரோகிகள் எனப்பட்டனர். மூன்று வருடமாக நாட்டில் காங்கிரஸுடன் கம்யூனிஸ்டுகள் ஒப்பந்தம் செய்துகொண்டு "போலோ மகாத்மா காந்திக்கு ஜே!" என்றும், "இன்குலாப் ஜிந்தாபாத்" என்றும் ஒரு தோளில் அறிவாள் சம்மட்டிக் கொடியையும், மற்றொரு தோளில் மூவர்ணக் கொடியையும் வைத்துக்கொண்டு கத்திய தற்கு அன்று எந்த காங்கிரஸ்காரர்கள் புகழ்ந்தார்களோ, அவர் களே இன்று கம்யூனிஸ்டுகள் நாட்டைக் காட்டிக்கொடுத்தவர் களென்றும், சர்க்காரிடம் பணம் வாங்கிக்கொண்டு ஒப்பந்தம் செய்துகொண்டவர்களென்றும் தூற்றுகின்றார்கள். கம்யூ னிஸ்டுகள் சர்க்காரிடம் பணம் வாங்கினார்களோ என்னமோ எனக்குத் தெரியாது. நாளையதினம் கம்யூனிஸ்டு கட்சி பொதுக் காரியதரிசி திருச்சிக்கு வருகிறார். சென்று கேளுங்கள். நான் ஜோஷியின் வக்கீல் அல்ல. ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுகளுடன் கூடிக் குலாவி வேலை செய்துவிட்டு உன் நிலை நிம்மதியானதும்

உன்பீடம் ஆடவில்லை எனக் கண்டதும், அவர்களை இன்று உனது ஆள்காட்டி விரலை நீட்டி ஆட்டி வழிகாட்டி ஓட்டி விட்டாயே. உன்னிடம் யார் வந்தாலும் இதைத்தானே செய்வாய்.

சென்ற தடவை நான் பொன்மலைக்கு வந்திருந்தபோது அப்போதே சொன்னேன் எனது கம்யூனிஸ்டு தோழர்களுக்கு "உங்கள் காங்கிரஸ் கர்தல் ராஜ்யம் இனிமேல் நடக்காது. நீங்கள் ஒரு கையில் பிடிப்பது அறிவாள் சம்மட்டி கொடி, மற்றொரு கையில் பிடிப்பது கைராட்டைக்கொடி, இது இனிமேல் நடக்காது. கதர்ச்சட்டை அணிந்துகொண்டு கையிடையில் கார்ல்மார்க்ஸ் புத்தகத்தை வைக்காதீர்கள். ஒன்று கதர் சட்டையை அகற்றி விடுங்கள்; இல்லையேல் கார்ல்மார்க்ஸ் புத்தகத்தை கொடுத்து விடுங்கள்" என்று. சொன்னேம் ஆனல் அதை அவர்கள் கேட்கவில்லை. இன்று என்ன நடந்தது. கம்யூனிஸ்டுகள் வெளியேற்றப்பட்டதும் மார்பிலிருந்த கதர் சட்டைகளும் பறிக்கப்பட்டன. சட்டையை அவர்கள் இழுக்க, பை கிழிய, கையிலுள்ள புத்தகம் கிழிக்கப்பட்டது. சமதர்மமே பழிக்கப்படுகிறது.

மதுரையில் "லெனின் ஒழிக," பொதுவுடமைக் கட்சி ஒழிக" என்று காங்கிரஸ் சகாக்கள் கோஷமிட்டதாகக் கேள்விப்பட்டேன். ஆண்மையும் அறிவும் உடைய எவனாவது கூறுவானா "பொதுவுடமை ஒழிக" என்று. இவர்களை நான் கேட்பதெல்லாம் பொதுவுடமையை ஒழித்தால் ஏழை வாழ என்ன வழி என்பது தான்? இவர்களுக்குத் தெரியாதா லெனின் காட்டிய வழி? இதைப்போல் நாங்கள் புதுச்சேரியில் ஒரு கூட்டம் நடத்திக் கொண்டிருக்கும்போது சில சச்சரவின் காரணமாக ஆலைத் தொழிலாளர்கள் "தமிழ் ஒழிக," "தமிழர் ஒழிக" என்று அட்டையில் எழுதி விளம்பரம் செய்து கூச்சலிட்டனர். இதுவும் மதுரையில் நடந்ததை ஒத்ததே. அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் நடந்த மதுரையில் அறுபத்து ஐந்தாவது திருவிளையாடலையும் நடத்தியுள்ளார்கள். பித்தாபுர ஜமீன்தாரல்ல! நமது நண்பர்கள்! நமது நன்மதிப்பிற்குரிய பொதுவுடமைத்தோழர்கள். ஒட்டமுடியாத தங்களது கொள்கைகளைக் காங்கிரஸுடன் ஒட்டவைக்கப் பார்த்தனர். முடியவில்லை, அகில வட இந்தியத் தொடர்பை வைத்துக்கொண்டிருந்தனர். இனியாவது உணரட்டும். அவர்கள் காரியம் சாதிக்க முடியவில்லை என்றவுடன்

விவாக விடுதலையாகிவிட்டது. விடுதலை எதிர்காலத்திலும் நிலைத்து நிற்குமா? விட்டகுறை, தொட்டகுறை என்பார்களே அதுபோல், பழக்கம் கொடிது என்பார்களே அதுபோல், திரும்பவும் சேர முயலுவார்கள், கோழியும் பாறையைக் கீற முயலுவதுபோல. காங்கிரஸுக்குக் கை கொடுத்து களைப்பு அடைந்தவர்கள் களைப்பு மிகுதியால் மறுபடியும் காங்கிரஸ்மேல் சாயலாம். சேர்ந்தாலும் அது நிலைக்காது? ஏன், முரண்பாடு அதிகமாக உண்டு.

காந்தியாரைப் போன்றவரல்ல ஜோஷி. காந்தியார் சுய ராஜ்யம் பணராஜ்யமாக இருக்கும். ஜோஷியினுடைய சுய ராஜ்யம் ஏழை ராஜ்யமாக இருக்கும். காந்தியாரிடம் பத்தாயிரம் கைராட்டை உண்டு ஜோஷி ஹைட்ரோ எலக்ட்ரிக் ஸ்கீம் (Hydro Electric Scheme) வைத்திருப்பவர். காந்தியாரிடம் அஹிம்சை உண்டு. ஜோஷியிடம் துப்பாக்கி இருக்கும். காந்தியாருடைய ராஜ்யத்தில் ஏழைகள் வரிப்பணம் தருவார்கள். ஜோஷியின் ராஜயத்தில் அப்படி இருக்காது. காந்தியார் ராஜ்யத்தில் பண்ணை முதலாளிகள் உண்டு. ஜோஷியின் ராஜ்யத்தில் கூட்டுப் பண்ணைதான் இருக்கும். இவை எல்லாம் உண்மையாகவே ஜோஷி செய்வாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் சமதர்ம ஆட்சியின் இலட்சணம் அதுபோன்றது.

நாங்கள் தமிழில் எழுதிய லெனின் புத்தகம் விலை நான்கு அணா. கம்யூனிஸ்டுகள் ஆங்கிலத்தில் வெளியிடும் புத்தகம் நாலேகால் ரூபாய். எது ஏடு படிப்பவனுக்கு, எது ஏழைக்கு? எது பாட்டாளி மக்களுக்காகப் போடப்பட்டது. எது பணக்காரருக்கு?

இன்னும் கம்யூனிஸ்டு கட்சியில் உள்ள பல தோழர்கள் சுயமரியாதை உலகினின்றும் வெளியேறியவர்களே. அவர்கள் மீண்டும் கட்சியில் சேரலாம். ஏன் அவர்கள் எங்களைவிட்டு விலகவேண்டும்? குறை இருந்தால் அதை நீக்குவதற்கு முயற்சிப்பதுதானே! எங்களிடம் பொதுவுடைமைத் திட்டங்கள், சமதர்மம் இல்லை என்றால் எங்களுக்குத் திட்டங்களைத் தீட்டித் தரட்டுமே! சமதர்மத்தை எங்களுக்கு ஊட்டட்டுமே தேவையிருந்தால்! இதையெல்லாம் செய்யாது வீணே விலகி தங்கள் உழைப்பினை எல்லாம் விழலுக்கு இறைத்த நீர் என மகாத்மாவிற்குச் செலவிடுகிறார்களே. தினமணி எழுதியதுபோல் காந்தி காந்திதான். துர்ப்பாக்கியம் மிகுந்த இந்த நாட்டிலே கார்ல்

மார்க்ஸ் புத்தகத்தைக் கனலில் இடும் வேலை நடக்கிறது. காந்தி காட்டும் வழிதான் கருத்துள்ளதெனவும், கார்ல் மார்க்ஸ் காட்டும் வழி கருத்தற்றதென்றும் கருதப்படுகிறது. மார்க்ஸ் காட்டிய வழியில் நடப்பது மடமையா ?

மாஸ்கோவிற்கும் மகாத்மாவிற்கும் இடையே மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேறுபாடு உண்டு. எனவே, கம்னியூனிஸ்டு தோழர்களே! திராவிடர் கழகத்தில் சேருங்கள். வேண்டுமானால் திராவிடர் கழகத்தை அகில உலக கம்யூனிஸ்ட் சங்கத்துடன் இணைத்துவிடலாம் என்று நான் என் கட்சியின் சார்பாக உறுதியாகக் கூறுகிறேன். இது உங்களுக்குப் புரியாது புரிந்தாலும் நீங்கள் தற்சமயம் சேரவும் மாட்டீர்கள். தேர்தல் மும்மரத்தில் உள்ள நீங்கள் சேரமாட்டீர்கள். தேர்தலுக்காகப் பிரசாரம் செய்யுங்கள். பிறகு யோசியுங்கள்.

சென்ற தடவை நான் பொன்மலைக்கு வந்தபோது உங்களுக்கும் காங்கிரஸுக்கும் இடையே உள்ள தொடர்பை அன்றே அறிந்து, திராவிடர் கழகத்தார் கட்டிடம் கட்டும்போது வாயிலைச் சற்றுப் பெரிதாகவே அமைக்கும்படி கூறினேன். ஆனால் இப்போது கூறுகிறேன், கட்டிடத்திற்குக் குறுக்குச் சுவர் வேண்டாமென்று. காரணம் வருகின்ற கம்யூனிஸ்டுகளின் கூட்டம் சற்று அதிகமாகவே இருக்குமாதலால் நிலப்பரப்பு அதிகம் வேண்டுமென்பதே. சுவர் கட்டிவிட்டால் பிறகு அதை நகர்த்த வேண்டியிருக்கும்.

மறுமுறை நான் உங்களுக்குக் கூறுகிறேன். நாங்கள் சமதர்மத்திற்கு விரோதிகளல்ல. மாஸ்கோவிற்கு நாங்கள் மாற்றார் அல்ல. நாங்கள் அதே பொதுவுடமையைத்தான் காவிரிக்கரையிலும் காண விரும்புகிறோம். புதிய திராவிடநாடு அமைப்பதைத்தவிர வேறு வழி இல்லை. புதிய திராவிடநாடு என்றால் என்ன என்று தோழர்கள் அறிய விரும்புவார்கள். நான் சென்னை மாகாணத்தைத்தான் குறிப்பிடுகின்றேன். இது ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளைவிடப் பெரியது. இது இயற்கையாகவே நிலவளம், நீர்வளம், குடிவளம், மனவளத்திலும் சிறந்தது. இங்கே நல்ல பாதுகாப்பு உண்டு. தனியாக வாழ விரும்பும் ஒரு நாட்டிற்கு வேண்டிய எல்லா வசதிகளும் உள்ளன. மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்தது. வடக்கே நல்ல அரண். நஞ்சை, புஞ்சைப் பயிர்கள் விளையக்கூடிய

நிலங்களும், வற்ருத ஆறுகளும் உண்டு. காடுகள் நிறைந்தது. சுரங்கப் பொருள்களான இரும்பு முதல் தங்கம்வரை இங்கு உண்டு. நாலரைக்கோடி மக்களும் நாட்டைக்காத்து வீரர்களா யும் தீரர்களாயும் வாழமுடியும்.

நாட்டுப் பிரிவினை என்றவுடன் நாங்கள் திராவிட நாட்டை இங்கிருந்து பெயர்த்தெடுத்துக் கொண்டுபோய் நியூ ஜிலாந்துடனே அல்லது ஆஸ்டிரேலியாவுடனே ஒட்டவைத்து விடப்போவதாக நினைக்க வேண்டியதில்லை. அப்படியே நினைத்தாலும் அது நடக்காது. அதற்கு நாங்கள் சஞ்சீவிப் பர்வதத்தைத் தூக்கிச் சென்ற அனுமார்களுமல்ல.

நாங்கள் கூறுவதெல்லாம் இந்திய உபகண்டத்திலே திராவிட நாட்டிற்கு ஓர் எல்லைக் கோடு இருக்க வேண்டும். ஆந்திரா, கேரள நாட்டில் தனித்தனியே ஆட்சி புரிவார்கள். ஒவ்வொன்றிற்கும் தனித்தனி சட்டசபை இருக்கும். இப்படி சுய ஆட்சி பெற்ற தமிழகம், ஆந்திரம், கேரளம் இவை மூன்றை யும் சேர்த்தே திராவிடக் கூட்டாட்சி (Dravidian Federation) நிறுவுவார்கள். இதற்குத் தலைநகர் சென்னையில் இருக்கும். டில்லி யில் இருக்காது. திராவிட நாட்டில் வெள்ளையன் இருக்கமாட் டான், வடநாட்டான் இருக்கமாட்டான். திராவிட நாடு திராவிடருக்குத்தான் உரியது என்பதைத்தான் தெரிவித்திருக் கிறோம்.

நாங்கள் இதைப் பெற்ருல் முகம்மதியர்கள் பாகிஸ்தானைப் பெற்று தனியாக ஆட்சி செய்வார்கள். மிகுந்துள்ள இந்துக்கள் இந்துஸ்தானத்தை ஆள்வார்கள். ஆனால் என்னுடைய அரசியல் யூகப்படி இந்துஸ்தான் தனியாக இருக்க முடியாது. ஏனெனில் மராட்டிய மாவீரன் சிவாஜி வழிவந்த மராட்டியர்கள் சாத்பூரா மலைச்சாரலில் ஒரு தனி அரசை நிறுவியே தீருவார்கள். ஐந்து அரசுகளாக இந்த உபகண்டத்தைப் பிரிக்கலாம்.

இன்றைய ஐரோப்பாவில் ஐம்பது தனியரசுகள் உண்டு. ஒவ்வொரு தனியரசும் நமது ஜில்லாவிற்குச் சுமாராக சமமானதாக இருக்கும். ஸ்பெயின் (Spain) அளவைப் படத்தில் பார்த்தால் அது நம் வீட்டிற்குப் போடும் வில்லை ஓடு அளவாக உள்ளது. ஐரோப்பா, ஐரோப்பியர்கே என்று யாராவது முழக்கியதுண்டா? நீங்கள் கேட்டதுண்டா? சிந்தித்துப்

பாருங்கள். திருச்சி கடைவீதியில் ஒரு பிரஞ்சுக்காரனும், ஒரு ஜெர்மானியனும், ஒரு கனடாக்காரனும் செல்வதாக நினைத்துக் கொள்வோம். அவர்களுக்குள் வித்தியாசம் காண முடியாது. ஒரே மாதிரியான உடையை உடுத்தி இருப்பார்கள். ஒரே நிறமுடையவர்களாக இருப்பார்கள். ஒரே மாதிரியான உணவை உட்கொள்வார்கள். அவர்கள் எல்லோருக்கும் பரமண்டலத்திலே இருக்கிற பிதா ஒருவர் தான். அவர்களது வேத புத்தகம் ஒரே பைபிள் (Bible) தான். அவர்களைக் கேட்டால்தான் தனித்தனி நாட்டினர் என்றறியலாம். வெவ்வேறு நாட்டினராயிருந்தும் இவ்வளவு ஒற்றுமைக்கும் காரணமென்ன? காரணம் அவர்களது வித்தியாசமில்லாத சுதந்திர வாழ்வு. சுதந்திரமே பிறப்புரிமை எனக் கருதுகின்றனர். தனி நாடாக சுதந்திரத்துடன் வாழ்வதை யாராவது தடுக்க முற்பட்டால் நாட்டு வாலிபர்கள் பீரங்கி முனையிலும் நிற்கத் தயாராய் இருக்கிறார்கள். அங்கு மட்டும் ஏன் இப்படி? இந்திய உபகண்டமானது ஏன் குறைந்தது ஐந்து தனியரசுகளாகவாவது பிரிக்கப்படக் கூடாது? வேத காலம் முதற்கொண்டு வெள்ளையன் காலம் வரை இந்தியாவை ஒரே அரசன் ஆண்டதுண்டா? வேதங்களும் கூட ஐம்பத்தாறு தேசங்கள் இந்தியாவில் இருந்ததாகக் கூறுகின்றன. நீங்கள் கதைகளிலும் நாடகங்களிலும் பார்த்திருப்பீர்கள் ராஜாக்களை! இன்றுகூடப் பால்வடியும் முகப் பாண்டியனைப் பற்றியும், அவந்தி அழகனைப் பற்றியும்தானே கோகில கானங்கள் தங்கள் இசையில் பாடவேண்டியிருக்கிறது. ஒரே இந்திய மன்னனைப் பற்றியதல்லவே! பாரத்வர்ஷம், ஆரியவர்ஷம், குமரிக்கண்டம் நாவலந்தீவு என்றுதானே நம் மூலங்களில் காணமுடிகின்றது. பூகோளம் கூடக் கூறுகின்றது இந்தியா ஒரு உபகண்டம் (India is a sub-continent) என்று. இந்தியா ஒரே நாடல்ல. ஒரே நாடு என்று கூறினபோதிலும் இடத்திற்கேற்ற இயல்பு அமைந்தே தீரும். அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது. குடிசையில் வசிப்பவன் குனிந்து செல்லக் கற்றிருக்கத்தான் வேண்டும், கற்றிருக்கத்தான் செய்வான். மாளிகையில் உள்ளவன் நிமிர்ந்தே நடப்பான். பணக்கார வீட்டில் செல்வக் குழந்தை அதிகாரத்துடன் பேசக் கற்றுக் கொண்டிருக்கும். பணக்காரன் வீட்டிற்கு ஒருவர் சென்றால் அது "நீ யார்", எங்கு வந்தாய்"? என்று அதிகாரத்துடன் கேட்கும். ஏழை ஒருவன் வீட்டிற்குச் சென்று "அப்பா இருக்கிறாரா" என்று கேட்டால் அது பணிவாகப் பேசும். அதிலும் "அப்பா இல்லை" என்று உடனே சொல்லும். ஏனெனில் அப்பாவைத் தேடி வரும் பல கடன்

## போகப்பொருள்கள்

போகப்பொருள்களும் வெகுதூரம் மாற்றமடைந்து விடும். அதற்காக ஏற்படும் செலவும் அதை அனுபவிக்கும் முறையும் வெகுசுருக்கமாக மாற்றமடைந்துவிடும்.

ஒரு டன்னுள்ள மோட்டார்கார் ஒரு அந்தர்வெயிட்டுக்கு வரலாம். பெட்ரோல்செலவு குறையலாம். பெட்ரோலுக்குப்பதில் மின்சாரசக்தியே உபயோகப்படுத்தப்படலாம். அல்லது விசைசேகரிப்பாலேயே ஓட்டப்படலாம்.

மின்சாரத்தின் உபயோகம் எல்லா மக்களுக்கு பயன்படக்கூடியவிதமாகவும், மக்கள் வாழ்க்கை வச களுக்குத் துணைசெய்யும் விதமாகவும் விரியும்—பெருகு விஞ்ஞானம், வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கப் பய படும்படியான அதிசயப் பொருள்களும், கண்டுபிடி களும், தனிப்பட்டவர்களின் இலாபத்துக்காக என் முடங்கிக் கிடக்காமல், சகல மக்களுக்கும் சௌகரியம் தருகிற பொது சாதனங்களாக அமையும்.

இவ்வளவு மாறுதல்களோடு இனிவருங்காலம் இருக்குமாகையால், இன்றைய உலக அமைப்பிலே உள்ள, அரசு, உடமை, நீதி, நிர்வாகம், கல்வி முதலிய பலதுறைகளிலும், இப்போது எவை எவை பாதுகாக்கப்பட என்னென்ன முறைகள் கையாளப்பட்டு வருகின்றனவோ, அம்முறைகளுக்கெல்லாம் அவசியமில்லாமற் போய்விடும்

என்பதோடு அவைசம்பந்தமாக இன்று நிலவும் பல கருத்துக்கள் அர்த்தமற்றதாகவும் போய்விடும்.

## கடவுள்

இனி வரும் உலகத்தில் கடவுள் தன்மை எப்படி இருக்கும் என்று அறிய மக்கள் கண்டிப்பாக ஆசைப் படாமல் இருக்கமாட்டார்கள்.

கடவுள் தானாக யாருக்கும் தோன்றுவதில்லை. பெரியோர்களால் சிறியோர்களுக்கு போதிக்கப்பட்டும் காட்டப்பட்டுமே தோற்றமான எண்ணமும் உருவமு மாகும். ஆனதால் இனிவரும் உலகத்தில் கடவுளைப் பற்றி போதிக்கிறவர்களும், காட்டிக்கொடுப்பவர்களும் மறைந்துவிடுவார்கள். யாராவது இருந்தாலும் அவர் களுக்கும் கடவுள் மறக்கப்பட்டுப் போகும். ஏனெனில் கடவுளை நினைக்க ஒரு மனிதனுக்கு ஏதாவது ஒரு அவசியம் இருந்தால்தான் நினைப்பான்—சகல காரண காரியங்களுக்கும் மனிதனுக்கு விபரம்தெரிந்துவிடுவதாக வும், சகல தேவைகளும் மனிதனுக்கு கஷ்டப்படாமல் பூர்த்தியாவதாகவும் இருந்தால் ஒரு மனிதனுக்கு கட வுளை கற்பித்துக்கொள்ளவோ நினைத்துக்கொள்ளவோ அவசியம் ஏன் ஏற்படும். மனிதன் உயிரோடு இருக்கும் இடமே அவனுக்கு மோட்சமாய் காணப்படுமானால் விஞ்ஞானத்துக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமில்லாத மோட்சம் ஒன்றை ஏன் கருதுவான். அதற்கு ஏன் ஆசைப்படுவான். "தேவை அற்றுப்போன இடமே கட வுள் செத்துப்போன இடமாகும்" என்பது அறிவின்

திருக்கும். பிறகு பம்பாயில் வேறு! பிறகு மைசூரில் வேறு மாறுபாடு. இவ்வாறு உணவும் மாறுகிறது. இது ஒரு கண்டத்தினுடைய மாற்றமல்லவா? எனவே ஆராய்ச்சி செய்தால் இந்தியா ஒரு உபகண்டம் என்னும் முடிவு ஏற்படும். இங்கு மூன்று தனி நாடுகளாவது இருக்கக் கூடாதா? வசதிகள் இல்லையா?

பண்டித நேரு கூறுகின்றார் "சின்ன நாடுகள் உலகத்தில் வாழ முடியாது" என்று. இது என்ன நியாயம்? "வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா? "சின்ன நாடு அழிந்து தான் தீர வேண்டுமா? இது தான் நீதியா? சிறிய நாடு பெரிய நாட்டிற்கு அடங்கத்தான் வேண்டுமா? ஏன் சிறிய நாடு வாழ முடியாது? ஐரோப்பாவிலே அத்தனை சிறிய நாடுகளும் இன்று சுய ஆட்சி நடத்தவில்லையா? பெரிய நாடுகள் அவற்றை அழித்தாவிட்டன. ஐரோப்பிய நாடுகளைப் பார்த்து ஏன் இதைக் கூறக்கூடாது நேரு.

பெரிய கோவிலருகே ஒரு சிறிய பஜனை மடம் இருந்தால் அதை அழிப்பதுதானே. பெரிய தாமரைத் தடாகம் ஒன்றிருந்தால் அதனருகே ஏன் ஒரு குட்டை. அதைத் தூர்த்துவிட வேண்டாமா? ஆகாய விமானம் இருக்கும்போது ஏன் கட்டை வண்டிகள் இருக்கின்றன? ஸ்பென்ஸர் கம்பெனிக்குப் பக்கத்தில் ஏன் ஒரு சிறிய சோடாக்கடை இருக்கவேண்டும்? அதை மூடி விட வேண்டாமா? சீமான்கள் இருக்கும் இடத்தில் ஏன் ஏழைகள் இருக்கவேண்டும். அவர்களை அழிக்க ஏன் அணுகுண்டுகள் தயாரிக்கப்படவில்லை? பெரிய நாட்டிடம் அணுகுண்டு இருந்தால் சிறிய நாட்டிடம் வீரர்கள் இருக்கிறார்கள். ஜப்பான் மிகவும் சிறிய நாடு. சைனாவோ பெரிய நாடு. பெரிய நாட்டை சிறிய நாடு துளைத்துக்கொண்டல்லவாயிருந்தது. சிறிய நாடுகள் வாழாது என்பது தேசியமல்ல திராவிட நாடு, இங்கிலாந்து ஜெர்மனி, பிரான்ஸைவிடப் பெரியது. அல்ஸ்டரை விட 48 மடங்குப் பெரியது போலந்தைப் போல் இரு மடங்கு உள்ளது. இத்தகைய நாடு ஏன் வாழக்கூடாது. இதற்கு முன்பு இந்த நாடு வாழ்ந்ததா இல்லையா? நர்மதையை வட எல்லையாகக் கொண்டிருந்தது. படை எடுத்தவர் எல்லாம் நர்மதைக் கரை அப்பக்கத்திலேயே நின்றுவிட்டனர். அசோகர் காலத்திலும் சரி, அக்பர், ஔரங்கசீப், ஷாஜகான், கனிஷ்கர் இவர்கள் காலத்திலும் சரி, வடநாட்டு ஏகாதிபத்தியம் நர்மதையைத் தாண்டித் தெற்கே வரவில்லை. வடநாட்டுடன் திராவிடம்

பிணைக்கப்படாமலிருப்பதற்குத் காரணம் திராவிடர்கள் தோள் வலியில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்ததே. அவர் கள் பாட்டாளிகள். பாடுபடத் தெரிந்தவர்கள். போரிடும் பண்பைப் பெற்றவர்கள், எனவே, திராவிட நாடு என்றும் அடிமைப்படவில்லை. நாடு நல்ல வளம் பெற்றது. செல்வம் பெற்ற நாடு. 4½ கோடி மக்களுக்கும் பரிமள வாழ்வைக் கொடு க்கக்கூடியது. எனவே நாங்கள் இழந்த நாட்டைக் கேட்கிறோம் எங்களுக்கு உரிமை உண்டு. திருவாவடுதுரை இராஜரெத்தின த்தை தோடி ராகம் வாசிக்கும்படிக் கேட்கிறோம். தேசிகரை தமிழ் இசை பாடுங்கள் என்று கேட்கிறோம். தெரியாதவர் களைப் பாடுமாறு கூறவில்லை. எங்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு. இன்று உலகத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பிற்குக் காரணம் "தான் பிறருக்கு அடிமையாகக் கூடாது, பிறர் தன்னை ஆளக்கூடாது" என்பதே, இதுவே உட்கருத்து. தங்களைத் தாங்களே ஆளுவதற்காக, அநீதியை ஒழிக்க, விடுதலை இயக்கம் நிதானமாகவும், நேர்மையாகவும் வேலை செய்து வருகிறது.

இந்த நேரத்தில் சொல்லுவார்கள்,வடநாட்டிற்கும் திராவிட நாட்டிற்கும்தான் வேற்றுமை உண்டா, தமிழ் நாட்டிற்கும் கேரளத்திற்கும், ஆந்திரத்திற்கும் வேற்றுமை இல்லையா என்று? தமிழ் நாட்டிற்கும் வடநாட்டிற்கும் முரண்பாடு உண்டு. ஆனால் தமிழ் நாட்டிற்கும் கேரளத்திற்கும், ஆந்திரத்திற்கும், வேறு பாடு உண்டு, முரண்பாடு கிடையாது. முரண்பாட்டிற்கும் வேறுபாட்டிற்கும் வித்தியாசத்தை விளக்கவேண்டிய இந்த நேரத்தில் நீங்கள் தமிழ் பண்டிதர்களாக சிறிது நேரம் ஆக வேண்டும். விளக்கு இருக்கிறது. சோடா பாட்டில் இருக் கிறது. நாமாக எண்ணினால் சோடா பாட்டிலை எடுத்து விளக் கில் அடித்து முரண்பாட்டை உண்டாக்கலாம். மற்றபடி அவற் றில் வேறுபாடு உண்டு. இரண்டும் கண்ணாடி என்ற வகையில் முரண்பாடு கிடையாது. இயற்கையில் வேற்றுமை இருக்கிறது தண்ணீர், இளநீர் இவை இரண்டிற்கும் வேறுபாடுதான் உள்ளது. தண்ணீரைப் பன்னீரிலே கலந்தால் புதிய நறு மணம் வீசும்பன்னீரோ,தண்ணீரோ கெடுவதில்லை,பிரிவதுமில்லை.ஆனால் தண்ணீருடன் எண்ணெயைக் கலந்தால்! தண்ணீரையும் எண் ணெயையும் ஒருங்கே கலக்க முடியாது. ஆகையால் அது முரண் பட்டது. காட்டில் காக்கையும், கிளியும்; குருவியும்; காடையும் கவுதாரியும், மைனாவும்; மயிலும், குயிலும் இருக்கின்றன. அவை யிடையே வேறுபாடுதான் உண்டு .மயில் குயில்மேல் படை

எடுக்காது. காக்கையும் கிளியும் போர் செய்யாது. கவுதாரிக்கு காடை சூப்பல்ல. ஆனால் அதே சமயத்தில் ஒரு கழுகு பறந்தால் இத்தனையையும் அடித்துக்கொண்டு போகப்பார்க்கும். இத்தனையும் அதற்கும் இறை எனவே கிளி, குயில், மைனா இவை வேறுபாடு உடையன. கழுகோ இவற்றினின்றும் முரண்பாடுடையது.

தமிழர், ஆரியர் இவர்களிடையே முரண்பாடு உண்டு. ஆரியனின் மூலம் வேறு. வேதம் வேறு. அவர்களது வேதமே நமது கண்ணீர். அவர்களுடைய சாஸ்திரமே நமது முதுகிலுள்ள தழும்பு. அவர்கள் தங்களைக் கடவுள், பூதேவர்களாகப் படைத்ததாகக் கூறுகின்றனர். தேவனுகப்பார்த்து அவர்கள் வழி காட்டுபவர்களாகவும் நாம் தாசர்களாவும் இருக்க வேண்டுமென்று பணித்திருப்பதாகக் கூறுகின்றனர். இவைகளெல்லாம் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வேறுபாடு அல்ல, முரண்பாடு. ஆனால் தமிழர், ஆந்திரர், மலையாளி இவர்களிடையே முரண்பாடில்லை. வேறுபாடு உண்டு. மொழியால் வேறுபாடு உண்டு. தெலுங்கனோ, மலையாளியோ தமிழை நீச பாஷை என்று கூற மாட்டான். ஆந்திரன் தமிழ் நல்லதல்ல என்று கூறமாட்டான் "அரவம் மனக்குத் தெலியது" என்று தான் கூறுவான். ஆனால் அதே சமயத்தில் ஒரு ஐயர் தமிழ், தெலுங்கு, மலையாளம், இவை யாவும் தனது தேவ பாஷையைக் காட்டிலும், மட்ட பாஷைகள் என்பான். நீச பாஷைகள் என்பான். மக்கள் மொழி கடைவீதிக்கு உதவும். தேவமொழி தேவாலயத்தில் உதவும். இது வேறுபாடல்ல. முரண்பாடு. மறந்தும் தெலுங்கன் மலையாளத்தையோ, தமிழையோ, அவர்கள் கலையையோ அன்றி நாகரீகத்தையோ தம்மினின்றும் முரணானது என்று கூறமாட்டான். ஆரியன் கூறுகின்றான் தேவமொழியை விட இம்மூன்றும் மட்டமானதென்று. இது முரண்பாடு. வேறுபாடல்ல. வேறுபாட்டுடன் கூடியவர்கள் ஒன்றாக வாழலாம். முரண்பாடுடன் கூடியவர்கள் வாழ முடியாது. இரயிலில் பத்து பேர் வேறுவேறு ஊருக்குப் போகக் கூடியவர்கள் இருக்கலாம். திருச்சி, அரியலூருக்கு போகக்கூடியவர்கள் இருந்தால் ஒரே வண்டியில் ஏறலாம். டில்லி செல்லக்கூடியவர் திருச்சிக்குப் போகும் வண்டியிலோ, திருச்சிக்குப் போகக்கூடியவர் டில்லி செல்லும் வண்டியிலோ ஏறினால் அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேரமுடியாது.

அதேபோல்,ஆரிய இலட்சியமும் நம் இலட்சியமும்ஒன்றுக்கொன்று முரண்பாடுடையது. நாம் இந்த உலக சுகத்தை நம்புவோம். எல்லோரும் ஒன்று, சமம் என்று எண்ணுகிறோம். ஆனால் அவர்களுக்கோ அந்த லோகத்தைப் பற்றிய நினைப்பு. உழைப்பதும் பலனை அனுபவிப்பதும் நமது இலட்சியம். அவர்களது இலட்சியம் அப்படி அல்லவே. சாஸ்திர சட்டப்படி அவர்கள் உழைப்பது தடுக்கப்பட்டது. அவர்கள் மனுச்சட்ட பூதேவர்கள், பிறரை உழைக்கும்படிச் சொல்லலாமே ஒழிய கலப்பையையோ ஏர்க்குச்சியையோ கையில் எடுக்கக்கூடாது. கட்டை தூக்கக்கூடாது. மரம் ஏறக்கூடாது. ஏன்? ஆண்டவன் முகத்தில் தோன்றினராம். தனக்குப் பிறர் அடங்கித் தீரவேண்டுமென்று ஆந்திரன் சொல்லமாட்டான். ஆரியன் சொல்வான். தமிழனைத் தொட்டால் தீட்டு என்று மலையாளியோ, மலையாளியைத் தொட்டால் தீட்டு என்று ஆந்திரனோ சொல்லமாட்டான். அருகே வந்தால் நெருங்காதே என்று கூறமாட்டான். ஆனால் ஆரியன் சொல்வான். இம் மூவரையும் தொட்டுவிட்டால் சனாதனப் பார்ப்பான் உடனே ஸ்நானம் செய்ய ஓடுவான். தொட்டுவிட்டு குளிக்காமலிருந்தால் நரகத்திற்கு போக அச்சாரம் வாங்கியது போலாம். இது வேறு பாடல்ல. முரண்பாடு. ஒரு நந்தவனத்தில் பல மலர்கள் இருக்கின்றன. அதில் தமிழ் மலர், ஆந்திர மலர். மலையாள மலர் மூன்றும் இருக்கின்றன. இந்த மலர்கள் மாண்புடன் இருக்கவேண்டுமெனில் ஆரியக் காளான்களைப் பிடுங்கி எரிய வேண்டும். மலர்கள் என்றால் முல்லை, ரோஜா, தாழம்பூ, என்ற பல மலர்கள் இருக்கலாம். ஆனால் கள்ளி, எருக்கான், காளான்கள், குரோட்டன்ஸ்,முதலியவற்றை களையவேண்டும். திராவிடத்தோட்டத்தில் ஆரியக் காளான்களுக்கு இடமில்லை.

ஆந்திரர்கள் சென்ற மாதம் மகாநாடு கூட்டி ஆந்திர மாகாணம் தனியாகப் பிரிந்து ஆந்திரர்களுக்காக வேண்டும் என்று தீர்மானித்தார்கள். இது நியாயமானது. மழை பெய்கிறது. வீட்டுள் இருப்பவனைப் பார்த்து ஏன் வெளியே வராமல் இருக்கிறாய் என்று எவனாவது கேட்பானா? கேட்டாலும் அவன், "நான் மழையில் நனைவதா" என்று கேட்பானா கேட்கமாட்டானா? எனக்கு ஆந்திர நாட்டின் நீதி, பண்பு இவை தெரியாது. தமிழ் நாடும் ஆந்திர நாடும் ஒன்றாய் இருக்கவேண்டுமென்றால் கூடாது என்று தான் அவர்கள் கூறுவார்கள். தமிழ்

நாட்டில் மேட்டூர் அணை உள்ளது. எங்களிடம் இல்லை என்பார்கள். கோயமுத்தூரில் மில்கள் உள்ளன. ஆந்திராவில் மில்கள் இல்லை என்பார்கள். உங்களிடம் Hydro Electric Power Station உள்ளது. எங்களிடம் இல்லை என்பார்கள். உங்களிடம் சுரங்கங்கள் உள்ளன, எங்களிடம் இல்லை என்பார்கள். தமிழ் நாட்டில் பல பெரிய பட்டணங்கள் உண்டு, ஆந்திராவில் இல்லை என்பார்கள். உங்களிடம் நான்கைந்து சர்வ கலாசாலைகள் உள்ளன. ஆந்திராவில் ஒன்று தான் இருக்கிறதென்பார்கள். சென்னையில் ஒரு வைத்தியக் கல்லூரி உள்ளது, எங்களிடம் இல்லை என்பார்கள்.

வட நாட்டில் பெரிய பெரிய கைத்தொழில் ஸ்தாபனங்களும் இயந்திரதொழிற்சாலைகளும் பெறுகி விட்டன. ஆனால் காந்தியார் தமிழ் நாட்டில் "சர்க்கா" வை ஆதரியுங்கள் என்று சொல்கிறார். பஜாஜ் வீடு பண மாளிகை. வட நாட்டிலும், பிர்லா வீட்டிலும் காந்தியார் கண் கண்ட தெய்வம். அவர்களுக்கு தாரக மந்திரத்தை ஓதுவார். அவர்கள் கைராட்டினத்தைச் சுற்றி வருபவர்கள் அல்ல. காந்தியைக் குருவாகக் கொண்ட அவர்கள், ஆகாய மண்டலத்தைப் புகை மண்டலமாக்கும்படியான பெரிய ஆலைகளை அமைத்திருக்கின்றனர். காந்தி மகாத்மாவின் பரமானந்த சீடர்கள் "சர்க்கா" வை ஆதரியுங்கள், கதரணியுங்கள், என்று கூறிக் கொண்டு கதரணிந்து, காந்தி கேட்கும் பணமும் ஈந்து பெரிய பெரிய ஆலைகளை ஷோலாப்பூர், அலகாபாத், பம்பாய் லாகூர், கல்கத்தா முதலிய இடங்களில், வைத்துக்கொண்டிருக்கின்றனர். இது முரணான செயலல்லவா? இவர்கள் குலத்துரோகிகள் அல்லவா? அவர்களுக்குக்காந்தியார் கண் கண்ட தெய்வம்! காந்தியின் அடிமடியில் கையை வைத்துக்கொண்டு பிரிட்டிஷாருடன் ஒப்பந்தம்பேசிப் பொருள்களை விற்கும் முதலாளிவர்க்கமல்லவா அவர்கள். காந்திஜீயின் சீடரான பிர்லா இங்கிலாந்திற்கோ, அமெரிக்காவிற்கோ சென்று என்ன சொல்கிறார்? 1946 மாடல் மோட்டார் மெஷினைக் காட்டு என்று கேட்கிறார். மோட்டார் கம்பெனி முதலாளிகள் இருவரும் சிரிக்காமலா இருப்பார்கள். தனித்திருக்கும்போது இவ்விருவரும் பேசிக்கொள்வார்கள், "காங்கிரஸ் தலைவர் மோட்டார் மெஷினைக் காட்டுமாறு கேட்கிறார். இவர்கள் பெரிய தந்திரசாலிகள். காந்தியின் போஷகர், பக்கத்தில் கைராட்டினத்தை வைத்துக்கொண்டு நம்மிடம் மிஷின் செட் கேட்கிறார். இவர் நம்மையும் ஏமாற்றி விடுவார்"

என்று ஒப்பந்தம் செய்வதற்கு நல்ல வக்கீலாகப் பார்த்து எழுதி ஒப்பந்தம் செய்து ஏமாறுமலிருப்பார்கள்.

நம் நாட்டில் பஞ்சம் ஏற்படுகின்றது. வடநாட்டின் பொருளாதாரம், அங்குள்ள சாதனங்கள் திராவிட நாட்டைத் தேய்த்து அழிப்பதற்கேற்ற சக்தியுடையன. ஆணிமுதல், தண்டவாளம் குண்டு வரை இரும்பில் செய்ய வேண்டியிருக்கிறது. திராவிட நாட்டில் இரும்பு இல்லை. வாழுமா இந்நாடு? சேலத்திற்கருகே இரும்பு இருக்கிறது, அதைத் தோண்டிப் பார்த்த டாட்டா ரொம்ப ஆழத்தில் இருக்கிறதென்று முயற்ச்சியைக் கைவிட்டு விட்டார். இந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலேயே டாடாவைப் போன்று பெரிய இரும்பு எஃகுத் தொழிற் சாலை உள்ளவர்கள் வேறு யாருமே இல்லை.

நம் நாட்டில் இயற்கையான நம் வளத்தை வாணிபத்தை வடநாட்டானுக்கு ஒப்படைத்து விட்டோம். வட நாட்டுத் தொடர்பை அறுத்தால்தான் நாம் வாழ முடியும். இழந்ததைத் திரும்பப் பெறுவதற்காகத்தான் இன்று திராவிடர் கழகம் பாடு பட்டு வருகிறது. திராவிடநாட்டை அடைந்தவுடன் நாட்டில் சமதர்மம் இருக்கும். உற்பத்திச் சாலைகள் ஊராளும் சர்க்காரிடம் இருக்கும். உலுத்தர்களாகிய முதலாளிகளிடம் இருக்காது.

வடநாட்டு வாணிபர்களும் ஏகாதிபத்திய வீரர்களும் திராவிட நாட்டுக் கோரிக்கையை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஆங்கில ஏகாதிபத்தியத்தையும், வடநாட்டு ஏகாதிபத்தியத்தையும் எதிர்க்க உங்கள் ஆதரவை நீங்கள் தரவேண்டும். நாலரை கோடியுள்ள ஆந்திர, கேரள, தமிழ் மக்களே! உங்களுக்குச் சிந்தித்துப் பார்க்க சிந்தனை உண்டு. எனவே சிந்தித்துப் பாருங்கள். சாதாரணமாக நாதியற்ற, நாடற்ற மக்கள் தங்களுக்கு நாடு தேடுகிறுர்கள். நமக்கு உரிமை இல்லையா? இப்போது பெல்ஜிய மன்னன் போரில் நாட்டை விட்டு ஓடி வந்தான். ஹாலந்து அரசி இங்கிலாந்திற்கு ஓடினுள். மேலும் இத்தாலி கிரீஸ், அல்பேனியா, ஸ்பெயின் முதலிய நாடுகள் தனியாக சுதந்திரத்துடன் இருக்கும்போது நான்கு பக்கங்களிலும் அரண்களைக் கொண்டதும், நாட்டைக் காக்க வீரர்கள் தோன்றும் வீர மரபினர் வழிவந்த மக்களைக் கொண்ட திராவிட நாடு தனியாக வாழ வேண்டுமென்றுல் அது எவ்விதம் குற்றமுடையதாகும்? நம்

மூதாதையோர் வாழ்ந்த நாட்டை, நம் மூதாதையோர் ஆண்ட நாட்டை நம் மூதாதையோரின் போர்க்களங்கள் பல நிறைந்த நாட்டை, காவிரி பாயும் நாட்டை, மூவேந்தர் பண்புடன் பரிபாலித்த நாட்டை, சங்கத் தமிழ் செழித்த நாட்டை, நாங்கள் பெறுவதற்காகச் செய்யப்படும் முயற்சியை எதிர்க்க, முயற்ச்சியைத் தடை செய்ய எந்த அகில உலக சக்தியாலும் முடியாது. எதிர்ப்புகள் நிச்சயமாக அழிக்கப்படும். ஏனெனில் லெனின் கூறியபடி "From a spark a flame will arise" என்பது நினைவிருக்கட்டும். திராட நாட்டில் ஜுவாலை தொலைவில் தெரிகின்றது பரவும் ஜுவாலைக்கு உங்கள் உணர்ச்சியாகிய கட்டையைக் கொடுத்துதவத் தயாராகுங்கள். உணர்ச்சியைத் தந்தால் ஜுவாலை பன் மடங்கு அதிகப் பிரகாசமாக வீசும். வீசும் ஜுவாலையினால் சுய நலம் அழிக்கப்படும். பிரான்சில் புரட்சி தோன்றிற்று. ரஷ்யாவில் புரட்சி தோன்றிற்று. அப் புரட்சி திராவிட நாட்டிலும் தோன்றும். அப் புரட்சிக்கு நீங்கள் உங்களைத் தத்தம் செய்யத் தயாராக வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு இத்துடன் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

கோபின் பிரஸ், திருச்சி. Ty. 56. 4-4-47 Party கா. 2000

# ஓமாந்தூரார்

1. பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தை வாபஸ்பெற வேண்டும்.

2. அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும்

3. மந்திரிகள், சட்டசபை மெம்பர்களின் சம்பளம் குறைக்கப்படவேண்டும்.

4. மில் தடைக் கொள்கையைக் கைவிட்டுவிடவேண்டும்.

ஆசிரியர்கள் சம்பளம் உயர்த்தப்படவேண்டும்.

போலீஸார் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும்.

பட்டாளத்திலிருந்து திரும்பினவர்களுக்கு வேலை தர வேண்டும். அதற்காகத் தனியாகத் தொழிலை அமைக்க வேண்டும்.

உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் வாழ்க்கைத்தரம் நாகரீக அளவுக்கு உயர்த்தப்பட்டு, அதற்கு ஏற்ற அளவு ஊதியம் தரப்படவேண்டும்.

9. ஜெமீன்முறை ஒழிப்பைத் துரிதப்படுத்த வேண்டும்.

10 மதஸ்தாபனங்களிலே முடங்கிக்கிடக்கும் சொத்துகளை புதிய தொழில்கள் அமைக்க உபயோகிக்கவேண்டும்.

11. புதியசமுக அமைப்புக்கு மக்களைத் தயார் செய்வதற்காக, தனியாக ஒரு மந்திரியை நியமிக்க வேண்டும்.

12. உணவுப் பொருள்கள், ஏழை மக்களின் உடைகள், ஆகியவற்றுக்கு, விற்பனை வரி கூடாது என்று சட்டத்தைத் திருத்தவேண்டும்.

13. கிண்டி குதிரைப் பந்தயம், சூதாடுமிடங்கள், ஷோமுதலியவைகளைத் தடுக்கவேண்டும்.

14 கல்லூரிகளில் தகுதி திறமை என்ற முறை ஒழியவேண்டும்.

(1 முதல் 13-வரை)
—"திராவிட நாடு."

30—3—47

விரைவில் வெளிவரும்

# எழுச்சி முரசு

இரா. நெடுஞ்செழியன் M. A., அவர்கள்

சொற்பொழிவு

(இரண்டாம் பதிப்பு)

திராவிட மாணவர் கழகம், பொன்மலை.

நோபில் பிரஸ், தெப்பக்குளம், திருச்சி. Ty. 56, C. 2000.

T2
R